P.R.No: 26. நாள்: 09.08.2017

## நாளிதழ் செய்தி - கிராம சபைக் கூட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 425 கிராம ஊராட்சிகளிலும் சுதந்திர தினமான 15.08.2017 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பின்வரும் பொருட்கள் விவாதிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

- குடிநீர் சிக்கனமாக உபயோகித்தல்
- கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட அறிக்கையினை கிராம சபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல்.
- அந்தியோதயா இயக்கம்.
- கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.
- ஊராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படவிருக்கும் ஊராட்சி வளர்ச்சி திட்டப் பணிகளுக்கான திட்ட அறிக்கையினை கிராம சபைக் சுகூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பொறுதல்.
- அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துதல்.
- திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான தகவல் தெரிவித்தல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளின் வகைப்பாட்டினை கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறுதல்.
- ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல்.
- மகளிர் திட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள்.
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமாக தகுதிபெற்ற இளைஞர்களுக்கு (18 முதல் 35 வயதுடையவர்கள்) வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி குறித்து விவாதித்தல்.
- அரசு மூலமாக தனிநபர் கழிப்பறை திட்டம் குறித்து அனைத்து மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அனைவரது வீட்டிலும் கழிப்பறைக் கட்ட ஏற்பாடு செய்தல்
- ஊராட்சி மன்றத் தனி அலுவலரால் கொண்டு வரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

எனவே பொது மக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் திரளாக கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.